எத்தனை பெரிய மனம் உனக்கு தமிழா
எத்தனை பெரிய மனம் உனக்கு

எல்லோரும் மனிதரே என்பது உன் கணக்கு

ஏறி மிதித்தாலும் அவன் மனிதன்
உன்னை எட்டி உதைத்தாலும் அவன் மனிதன் 2
காறி உமிழ்ந்தாலும் அவன் மனிதன்
உன் கதையை முடித்தாலும் அவன் மனிதன்

எத்தனை பெரிய மனம் உனக்கு தமிழா
எத்தனை பெரிய மனம் உனக்கு

அடக்கி ஆண்டாலும் அவன் மனிதன்
உன்னை அடிமை கொண்டாலும் அவன் மனிதன் 2
ஒடிக்கி வதைத்தாலும் அவன் மனிதன்
உன் உரிமை பறித்தாலும் அவன் மனிதன்

எத்தனை பெரிய மனம் உனக்கு தமிழா
எத்தனை பெரிய மனம் உனக்கு

தாக்க வந்தாலும் அவன் மனிதன்
உன் தமிழை கெடுத்தாலும் அவன் மனிதன் 2
எய்க வந்தாலும் அவன் மனிதன்
தமிழ் இனத்தை அழித்தாலும் அவன் மனிதன்

எத்தனை பெரிய மனம் உனக்கு தமிழா
எத்தனை பெரிய மனம் உனக்கு